# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# அரையாண்டுப் பரீட்சை 2022

ஆண்டு: 5 திகதி: 18.06.2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. செல்வநாயககி சிவசுப்பிரமணியம்
உதவி: செல்வி காவிகா சித்திவிநாயகர்

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து விளங்கி, அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.

# மயில்



மலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்த மாய் ஆடுது

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது.





வானம் பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்தி ருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது.



நஞ்சைக் கக்கும் நாக பாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளித்தி டாமல்
அருகில் நின்று பார்க்குது



கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறான்

**வித்துவான் க.வேந்தனார்**

1 மலையில் என்ன கூடுகிறது?

---

2 மயில் எப்படி ஆடுகிறது?

---

3 தாளம் போடுவது எது?

---

4 அது எப்படுத் தாளம் போடுகிறது?

---

5 வானம்பாடி என்ன செய்கிறது?

______________________________________________

6 மயிலின் கூத்தை எவை பார்க்கின்றன?

______________________________________________

7 வேடன் என்ன செய்கிறான்?

______________________________________________

8 குறத்தி என்ன செய்கிறாள்?

______________________________________________

9 இப்பாடலின் தலைப்பு என்ன?

______________________________________________

10 இப்பாடலை எழுதியவர் யார்

______________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.

1 அகம் ______________

2 புதுமை ______________

3 கோழை ______________

4 முதுமை ______________

5 நீதி ______________

பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1 கற்பாறை ___________ + ____________

2 திருமணமுறை ___________ + ____________

3 மரணச்சடங்கு ___________ + ____________

4 அமர்ந்திருப்பது ___________ + ____________

5 கலாசாரம் ___________ + ____________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

கீழே தரப்பட்ட வினைச் சொற்களில் பொருத்தமான சொற்களைத் தெரிந்து கோடிட்ட இடங்களில் எழுதுக.

**பார்த்தார், பாடுவான், வரைகிறேன், விளையாடுகிறார்கள், ஓடியது**

1 சிறுவர்கள் பூங்காவில் ___________________

2 நான் ஓவியம் _______________________

3 தம்பி இனிமையாகப் ___________________

4 பூனையைக் கண்ட எலி துள்ளி _____________

5 அரசர் நீரைச் சுவைத்துப் ____________

பின்வரும் வாக்கியங்களில் “வா” என்ற சொல்லைப் பொருத்தமான காலத்துக்கு மாற்றி எழுதுக.

உ+ம்: மாமா நாளை வருவார்

1 நான் நேற்று ____________

2 நாங்கள் நாளை_____________

3 கண்ணன் நேற்று__________

4 அப்பா நேற்று _____________

5 வாணியும் கண்ணனும் நாளை ________

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

I அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிந்து அடிக் கோடிடுக.

1 (உன் / உண்) பெயர் என்ன?

2 (என் / எண்) பெயர் வாணி.

3 சிங்கம் முயலைக் கொன்று (உண்டது / உண்டது).

4 என் வீட்டு (எண் / என் ) ஆறு.

5 (வானம் / வாணம்) நீல நிறமானது.

6 மக்கள் நாடகத்தைக் கண்டு (கழித்தார்கள் / களித்தார்கள்).

7 எனது தலையணையின் (உரை / உறை) அழகானது.

8 அம்மா தேநீரில் சீனியைக் (கரைத்தார் / கறைத்தாள்)

9 எழுத்துப் பிழைகளை (அழித்து / அளித்து) திருத்துக.

10 (மலை / மழை) உச்சி சிகரம் எனப்படும்.

II பின்வரும் தமிழ்ச் சொற்களை பொருத்தமான ஆங்கிலச் சொற்களுடன் இணையுங்கள்.

| | |
|---|---|
| 1 வாகனங்கள் | Travel |
| 2 பிரயாணம் | Television |
| 3 கடல் பயணம் | Long distance |
| 4 தொலைக் காட்சி | Vehicles |
| 5 நீண்ட தூரம் | Voyage |

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

உமது பிறந்த நாள் விழாவுக்காக உமது நண்பனுக்கு அழைப்பிதழ் அனுப்ப விரும்புகிறீர். அவருக்கு 50 சொற்களில் அழைப்புக் கடிதம் எழுதவும்.

(கடிதத்தில் பிறந்த நாள் விழா எப்போது? எங்கே? நேரம், உடை அணிதல் பற்றிய விபரங்கள் எழுதப்பட வேண்டும்.)

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

கட்டுரை எழுதுதல்.

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 15 வாக்கியங்களுக்குக் குறையாது எழுதுக.

1 தைப் பொங்கல்

2 அண்மையில் உங்கள் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழா